அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
காரைக்கால்

ஒப்பந்தப்புள்ளி

எண்: அஅகஅக/ கா/ அ1/மரம் ஏலம்/2017-18. நாள்: 04.04.2017

இதனால் பொது மக்களுக்கு தெரிவிப்பது யாதெனில் காரைக்கால் அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு சொந்தமானதும் முதல்வர் கண்காணிப்பில் உள்ளதுமான கீழ்க்காணும் பலன் தரக்கூடிய மரங்கள் ஏலம் விடுவதற்கான ஒப்பந்த புள்ளிகள் கோரப்படுகின்றன.

மரங்களின் விபரம்

1. தென்னை மரங்கள்
2. மா மரங்கள்
3. புளிய மரங்கள்
4. பனை மரங்கள்

2.ஒப்பந்த புள்ளிகள் முதல்வர், அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காரைக்கால் - 609605. என்ற முகவரிக்கு உரையின் மேல் "பலன் தரக்கூடிய மரங்களை ஏலம் எடுப்பதற்கான ஒப்பந்தப் புள்ளிகள்" என்று குறிப்பிட்டு அவற்றை 11.04.2017 அன்று மாலை 3.00 மணிக்குள் கீழே கையொப்பமிட்டவரை வந்தடையுமாறு அனுப்பவேண்டும்.

3. ஏலத்தில் கலந்துகொள்ளும் ஒப்பந்ததாரர்கள் ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும் ) முன்வைப்புத்தொகையாக செலுத்த வேண்டும். அத்தொகை ஏலம் முடிந்ததும் வெற்றிபெறாதவர்களுக்கு திருப்பி தரப்படும். முன்வைப்பு தொகை செலுத்தப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் பரிசீலிக்கப்படமாட்டாது.

4. குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்கு பின் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. ஏலம் விடப்பட்ட பின்னர் ஏலம் பற்றிய எந்தவித முறையீடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் கீழ் கையொப்பமிட்டவரின் அனுமதியோடு அலுவல் நாளில் அலுவலக நேரங்களில் மரங்களை பார்வையிடலாம்.

7.மரங்களின் பலனை ஏலம் எடுப்பவர் ஏலம் அனுமதிக்கப்பட்ட நாள் முதல் 31.03.2018 வரை பெறலாம்.

8. ஏலம் எடுப்பவர் மரங்களின் பலனை மட்டும் அனுபவிக்கலாம், ஆனால் மரங்களையோ, மரக்கிளைகளையோ வெட்டுதல் கூடாது . கள் இறக்குதல் கூடாது.

முதல்வர்
அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும்
அறிவியல் கல்லூரி
காரைக்கால்

இடம் : காரைக்கால்
தேதி : 04.04.2017

TO:

1.All Head of Office, Karaikal.

2.All Commissioners, Municipality / Commune Panchayats in Karaikal Region.

3.College Website : www.aagac.puducherry.gov.in